

தலைமைச் செயலகத்தில் நேற்று (04.11.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் எழுதுப்பொருள் மற்றும் அச்சுத் துறையின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் வே.ராஜாராமன், எழுதுப்பொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி வெ.ஷோபனா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவல்லிக்கேணி பகுதி

## வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் அறிக்கை!

சென்னை, நவ. 5 -

திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக் கேணி பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம் இன்று (05.11.2024 செவ்வாய்கிழமை) காலை 10.00 மணியளவில் இராயப் பேட்டை கஜடி பேகம் தெரு வில் உள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் ம.தயா நிதி தலைமையில் நடைபெறுகிறது.

வீ.பி. பொன்னரசு, ஆர். என். துரை, அ. சுபேர்கான், வி.என். ராஜன், ப. பிரகாஷ், எ. விஜயராஜ், இ. இளம்பாரதி, கமலாசெழியன், ரவிராஜ்குமார், எம். கே. ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

ஆலோசனை கூட்டத்திற்கு வட்டச் செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், BLA2 , கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் தெரிவித்துள்ளார்.

### பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு தலைமையில்

## திருவொற்றியூர் கிழக்கு பகுதி பாக முகவர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறுகிறது!

சென்னை, நவ.5-

திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை வருமாறு:-

திருவொற்றியூர் கிழக்கு பகுதி பாக முகவர்கள் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (5.11.2024) திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், டி.சி.வி மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஸ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, ஆர்.சந்தர், ஏகா.கார்த்திகேயன், ஆகியோரின் முன்னிலையில் நடைபெறுகிறது.

வார்டு 7 - இன்று 5.11.2024 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு ராமகிருஷ்ணா நகரில் அமைந்துள்ள சமுதாய கூடம்

5.11.2024 வார்டு 8 மாலை 5 மணிக்கு எகவள்ளியம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள வட்ட செயலாளர் அலுவலகம் இன்று (5.11.2024) மாலை 6 மணி வார்டு 9 மாவட்ட அவைத்தலைவர் அலுவலகம்

மாலை 7 வார்டு 10 சன்னதி தெரு அமைந்துள்ள பகுதி கழக அலுவலகம்

வார்டு 14 அ மாலை 7.30 மணி பீச் ரோட்டில் தாங்கல் அமைந்துள்ள வட்ட செயலாளர் அலுவலகம்

இதில் சென்னை வட கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

ஆகையால் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் மாவட்ட பிரதிநிதிகள் வட்ட கழக நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட பகுதி அணியின் நிர்வாகிகள் பாக முகவர்கள் கழக மூன்னோடிகள் கலந்து கொள்ளும்படி கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைபடி சோராஞ்சேரி கண்ணப்பாளையம் ஊராட்சிகளில் உள்ள பாக முகவர்கள் மற்றும் பாக பணிக்குழு உறுப்பினர்கள் ஆலோசனை ஆய்வு கூட்டம் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி , பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி.செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வருகின்ற தேர்தல் பணி குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். அருகில் பொதுகுழு உறுப்பினர்கள் காஞ்சனா சுதாகர், வி.குமார், வழக்கறிஞர் என். பி.மாரிமுத்து, ஏ.ஜனார்தனன், எம்.இளையான், கே.எஸ்.புகழேந்தி, சுமதி குமார், ஏ.ஆர்.பாஸ்கர், வயலை ஆர்.பிரபாகரன், ஏ.ஜி.ரவி, குமரேசன், என்.சண்முகம், வி.தணிகாசலம், சுகுமாரன், எம். அருணாச்சலம், எம்.ராம்பாபு, பேட்டை த.திருமலைராஜ், மு.ராஜாராம், கேசவன், வழக்கறிஞர்கள் அருண், எம்.அத்திகிரிஅருளாளன், திருலோகசுந்தர், பாரிமளழகன், சாய்மோகன், ஸ்ரீதர், ஜெகதீஷ், விஜயரங்கன், அன்பழகன், கோவிந்தராஜ், மே.ம.முத்து, சி.வெங்கடேசன், எம்.கே.ராதா, மோகன் தாஸ், தேவி நித்தியனந்தம், டில்லிபாபு உள்பட பலர் உள்ளனர்.

### திருப்பத்தூர் மாவட்டம்

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக முகவர்கள் (BLA - 2) ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் (BLA - 2) ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறும். இக்கூட்டத்தில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA - 2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

கூட்டம் நடைபெறும் விவரம் வருமாறு:-

| தொகுதி | நாள் / நேரம் | இடம் | தொகுதி பார்வையாளர்கள் |
|---|---|---|---|
| ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி | 5.11.2024 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி | சுப்பிரமணி சம்பூர்ணம் மஹால், பானகார வட்டம், நாட்றம்பள்ளி புதுப்பேட்டை மெயின் ரோடு. | ஜி.ராமய்யா, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர். |
| வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி | 5.11.2024 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி | ஆர்.ஆர்.மஹால், மேல்நிம்மியம்பட்டு, வாணியம்பாடி ஆலங்காயம் மெயின் ரோடு. | S.A.S.ஹபீசுல்லா, தலைமைக் கழக செய்தி தொடர்பு துணைச் செயலாளர். |
| திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி | 6.11.2024 புதன்கிழமை காலை 10.00 மணி | லலிதா மஹால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருப்பத்தூர். | வேலூர் ஜி.ரமேஷ், கழக கொள்கைப்பரப்பு துணைச் செயலாளர். |
| ஆம்பூர் சட்டமன்ற தொகுதி | 8.11.2024 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி | பிரியா மஹால், M.C. ரோடு, ஆம்பூர். | P.S.சீனிவாசன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர். |

பொருள் : தமிழ்நாடு துணை முதல்வர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா தொடர் நிகழ்ச்சிகள் குறித்து,

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி குறித்து,

2026 சட்டமன்ற பொதுத் தேர்தல் பாக முகவர்கள் (BLA – 2) மற்றும் பூத் கமிட்டி புதிய நிர்வாகிகள் அமைப்பது குறித்து,

கழக ஆக்கப்பணிகள்.

**க.தேவராஜி எம்.எல்.ஏ.**
செயலாளர்
திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.

### "என் உயிரினும் மேலான" - பேச்சுப் போட்டி!

## ஒட்டுமொத்த திராவிட இயக்கத்திற்கே புத்துணர்ச்சி!



ஒரு ஐந்து ஆறு ஆண்டுகளுக்கு முன் 'தி.மு.க.வில் இளைஞர்கள் இல்லை' என்ற பேச்சு பரவலாக இருந்தது. அதாவது 2001 தேர்தலின் போது பணப்புழக்கம் இல்லை என்று சம்பந்தமே இல்லாமல் ஒரு குற்றச்சாட்டைப் பரப்பி தி.மு.க. ஆட்சியை விமர் சித்தார்கள். அதுபோல இதுவும் ஒரு பொய்தான் என்றாலும், எங்களிடம் இளைஞர்கள் உண்டு என்று நம்மால் சொல்லத்தான் முடிந்ததே தவிர, மாநாடுகளில் காட்டத்தான் முடிந்ததே தவிர நம் எதிரிகளுக்குப் புரியும் வகையில் நிரூபிக்க முடிய வில்லை.

இன்று எடப்பாடி அ.தி.மு.க. மீதும் அதே விமர்சனம். ஆனால் அது உண்மையான விமர்சனம் என்பதால் எடப்பாடி ஒப்புக்கொண்டுவிட்டார். "எங்கள் தொண்டர்கள் எம்.ஜி.ஆர். காலத்து ஆட்கள். எல்லோருக்கும் வயதாகிவிட்டது என்பதால் பலர் இறந்துவிட்டார்கள்," என்று! ஆனால் தி.மு.க. இப்படி இருக்க முடியுமா? இப்படி ஒரு பேச்சுக்காவது, காமெடிக்காவது சொல்ல முடியுமா? முடியாது. ஏன்? அ.தி.மு.க.வைப் போல அல்லாது, தி.மு.க. என்ற கட்சி இன்றும் சரி, அடுத்த 100 ஆண்டுகளுக்கும் சரி, தேவைப்படுகிறது. அது உயிர்த்திருப்பதும், அதில் இளைஞர்கள் சேர்வதும், இருப்பதும், பணியாற்றுவதும் அரசியல் அத்தியாவசியம். ஆனால் ஈழப்பிரச்சினை போன்ற விஷயங்களை வைத்து இளைஞர்களை எதிர் திசையில் இழுக்க முடிந்ததே தவிர, அவர்களைத் தக்க வைக்க முடியவில்லை.

கொஞ்சம் சமூகவலைதளச் சூழலையே பார்த்தீர்கள் என்றால் ஒரு 5 ஆண்டுகளுக்கு முன் நம்முடன் தீவிரமாகச் சண்டை போட்ட பல இளைஞர்கள் இப்போது நம் பக்கம் இருக்கிறார்கள். அவர்களாகவே உண்மையை உணர்ந்தது, அவர்களுக்கு நாம் உண்மையை உணர்த்தியது ஒரு புறம் என்றால், பா.ஜ.க. ஆட்சியும் பா.ஜ.க. காரர்களும் ஒரு புறம் காரணம்! அதிலும் எச்.ராஜா, குருமூர்த்தி, சேஷாத்ரி போன்றோர் திராவிட இயக்கத்துக்கு ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது. பெரியாரின் பக்கம் அவர்கள் தள்ளிவிட்ட இளைஞர்கள் எண்ணற்றோர். ஆக, பெரியாரை ஒரு 'ஐகான்' ஆக விரும்பத் தொடங்கிய இளைஞர்கள் அ.தி.மு.க. பக்கமா போவார்கள்? தி.மு.க. பக்கம்தான் வரப் பார்ப்பார்கள். ஆனால் அதில் ஒரு சிறுதயக்கம் அவர்களைத் தேடி வந்தது. அது 'சிலர்' தரக்கூடிய அழுத்தம்!

எழுத ஆரம்பித்த ஆரம்ப காலத்தில் எனக்கு சில நடுநிலைகள் இப்படி அட்வைஸ் செய்வார்கள், "நல்லா எழுதுறீங்க, பேசுறீங்க. ஏன் தி.மு.க. ஆதரவா இருக்கீங்க? புதுசா ஏதாவது கட்சிக்கு சப்போர்ட் பண்ணலாம்ல? இல்லேன்னா நியூட்ரலா இருக்கலாமே?" என்று. இது ஒருவகையில் குற்ற உணர்ச்சியைத் தூண்டி விடுவது. ஒரு பெரியவெகுஜன கட்சிக்கு ஆதரவளிப்பதே குற்றம் என்ற ரீதியில் நினைக்க வைத்து, உட்டோபிய கனவுகளை விதைத்து, அரசியல் பைத்தியமாக அலைய வைக்கும் முயற்சி. இந்தக் குற்ற உணர்ச்சிக்கு ஆளாகும் ஆட்கள்தான் மாற்றம், மாற்றம் என்று அலைந்து கடைசியில் மோடி போல 'சொர்க்கக் கனவை' விற்கும் வியாபாரிகளிடம் மாட்டி மொத்தத்தையும் இழப்பார்கள். ஆக, இப்படித்தான் இந்த இளைஞர்களிடமும் பல நடுநிலைகள் பேசியிருப்பார்கள். அவர்களும் கொஞ்சம் தடுமாற்றம் அடைந்திருப்பார்கள். அவர்களிடம் எப்படி உண்மையை எடுத்துச் சொல்வது? நிற்க.

என்னதான் தன்னார்வல திராவிட இளைஞர்கள் திராவிடம் 2.0 போன்ற பெயர்களில் பேச்சாளர்களை வைத்து சிறு கூட்டங்கள் நடத்தினாலும், மிகப்பெரிய கூட்டத்திடம் திராவிடக் கருத்தியலை, சாதனைகளை, தி.மு.க.வின் சாதனைகளைச் சொல்ல முடியவில்லை. அது, தி.மு.க. போன்ற பேரியக்கங்கள் கூட்டங்களை ஏற்பாடு செய்தால்தான் முடியும். அது எப்போது நடக்கும் என நாங்கள் எல்லாம் காத்திருந்த போதுதான் தி.மு.க. இளைஞரணி என்ற, தளபதி ஸ்டாலின் உருவாக்கிய 'அரசியல் ராணுவம்' இப்போதைய துணை முதல்வர் உதயநிதி அவர்கள் பொறுப்பில் வந்தது. ஆட்சியும் தி.மு.க. வசம் வந்தது. இது பத்தாதா?



**டான் அசோக்**
திரை எழுத்தாளர்

பல்லாண்டுகளாக திராவிட இயக்கம் சந்தித்திருந்த பரப்புரைப் பின்னடைவை முழு வீச்சில் சரிசெய்ய அவர் முடிவு செய்தார். இளைஞர்களிடம் தி.மு.க.வை, (அதாவது தி.மு.க. என்றால் தி.மு.க. மட்டும் என்று நீங்கள் புரிந்துகொள்ளக் கூடாது. அதில் நீதிக்கட்சியில் இருந்து பனகல் அரசரில் இருந்து பெரியாரில் இருந்து, அண்ணா, கலைஞர், தளபதி ஸ்டாலின் வரை அடக்கம்) கொண்டு சேர்க்க முடிவுசெய்தார். முதலில் அவர் அறிவித்தது திராவிட மாடல் பயிற்சிப் பாசறைகளை! ஒவ்வொரு தொகுதியிலும் இளைஞர் கூட்டத்தைக் கூட்டி அவர்களிடம் திராவிடக் கருத்தியலை சுவாரசியமான முறையில் பேசுவதுதான் அதன் நோக்கம்.

தி.மு.க. இளைஞரணியைப் பற்றி நான் பெருமையாக அடிக்கடி ஒன்றைக் குறிப்பிடுவது உண்டு. தி.மு.க.வின் பிற அணிகள் எல்லாம் தலைவர்கள் சொன்னதைத்தான் செய்து முடிப்பார்கள். இளைஞரணியினர் மட்டும்தான் அவர்கள் செயலாளர் நினைத்ததைக் கூட செய்து முடிப்பார்கள். இப்படி நான் அவர்களைப் பாராட்டியதெல்லாம் இந்த திராவிட மாடல் பயிற்சிப் பாசறைகளை உதயநிதி அவர்களின் சொல்லுக்கு இணங்க செம்மையாக அவர்கள் நடத்தியதைப் பார்த்த பிறகுதான். என்ன ஏற்பாடுகள், எவ்வளவு இளைஞர் கூட்டம்!

இதில் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம், ஏதோ திட்டம் போட்டோம் டக்குடக்குனு நடத்தி முடிப்போம் என்பதாக இருக்கவில்லை உதயநிதியின் எண்ணம். அவருக்கு வேலை முடிவதைவிட, வேலைக்கான நோக்கம் நிறைவேறியே ஆக வேண்டும்! நோக்கம் நிறைவேறாமல் வேலை மட்டும் நிறைவடைவது வெட்டிவேலை என்பதை முற்றிலும் புரிந்திருந்தார். அதனால் தொடர்ந்து ஒவ்வொரு கூட்டமும் எப்படி இருந்தது, எப்படி நடந்தது, இளைஞர்கள் புரிந்து கொண்டார்களா, இளைஞர்களின் ஃபீட்பேக் என்ன, நம் ஃபீட்பேக் என்ன என்பதை அவர் தரப்பில் இருந்து கேட்டுக்கொண்டே இருப்பார்கள். நம்மைப் பற்றியும் கண்டிப்பாக அவர் தரப்பில் கேட்டிருப்பார்கள். நாம் குறைகளைச் சொன்னால் அடுத்த கூட்டத்தில் அது சரிசெய்யப்படும்.

இப்படி பல கூட்டங்களை நடத்தி லட்சக்கணக்கான இளைஞர்களிடம், பல பேச்சாளர்களை வைத்து திராவிட இயக்கக் கருத்துகள் கொண்டு சேர்க்கப்பட்டன. எவ்வளவு பெரிய சாதனை இது என்று நினைத்து நிமிர்வதற்குள் அடுத்து வந்ததுதான் கலைஞர் நூற்றாண்டுக்கான "என் உயிரினும்மேலான"என்றபேச்சுப்போட்டி!தி.மு.க.விற்காக முழுக்க முழுக்க இளம் பேச்சாளர்களை உருவாக்க துணை முதல்வரால் உருவாக்கப்பட்ட, அவரது இளைஞரணிச் செயல்வீரர்களால் நடத்தப்பட்ட மிகப்பெரிய போட்டி.

கிட்டத்தட்ட 17,000 விண்ணப்பங்கள்! முதல் நாள் அதைக் கேட்கும் போதே தலைசுற்றியது. ஒவ்வொரு பேச்சாளருக்கும் முதல் சுற்றில் மூன்று நிமிடங்கள் பேச வாய்ப்பு. இந்தக் கால இளைஞர்களின் attention spanஐ மனதில் வைத்தே இந்த 3 நிமிடம் என்பது நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியே என்றாலும், 17,000x3! அதாவது 51,000 நிமிடங்கள்! எப்படி இதை ஜட்ஜ் செய்வது? எப்படி பேச்சாளர்களைத் தேர்ந்தெடுப்பது? ஆனால் மிகச்சிறப்பாக நடுவர்களை நியமித்து, அதுவும் ஒரு நடுவர் அல்ல, மூன்று நடுவர்கள். சராசரி மதிப்பெண் இறுதி மதிப்பெண்ணாக எடுத்துக்கொள்ளப்படும். போட்டியாளர்களைப் பிரித்து, தனித்தனி இடங்களை, மேடைகளை ஒதுக்கி, போட்டி நடக்கும் ஒவ்வொரு ஹாலுக்கும் பொறுப்பாளர்களைப் போட்டு....!!! யப்பா! வருவதெல்லாம் இளம் மாணவர்கள். அதிலும் மிகமிக அதிகமாக மாணவிகள். எனவே அவர்களுக்கு எல்லாம் தகுந்த பாதுகாப்பு அளித்து, உணவு வழங்கி, இன்னும் எத்தனையோ வேலைகள், ஏற்பாடுகள்!

இந்த முதல் சுற்று முடிந்தபின், நடுவர்கள் ஆகிய நாங்கள் கொடுத்த ஃபீட்பேக் அடிப்படையில் இரண்டாம் சுற்றுக்குத் தேர்ச்சி பெற்ற பேச்சாளர்களுக்கு எங்களை வைத்தே பயிற்சியும் கொடுக்கப்பட்டது. என் தரப்பில் 21 பேச்சாளர்கள். அவர்களிடம், 'உணர்வு இல்லாத பேச்சில் உண்மை இருக்காது. உண்மை இல்லாத பேச்சில் உற்சாகம் இருக்காது, உற்சாகம் இல்லையென்றால் யாருக்குமே பேச்சு பிடிக்காது' போன்ற பொதுவான விஷயங்களையும், இன்றைய இளைஞர்களிடம் எப்படிப் பேச வேண்டும், எப்படிப் பேசினால் அவர்கள் எப்படிக் கவனிப்பார்கள் போன்ற விஷயங்களையும் பகிர்ந்தேன். அது மட்டுமல்லாமல் ஒரு வாட்சப் குழு தொடங்கி அந்தப் பேச்சாளர்கள் அடுத்த சுற்று வரை என்னிடம் சந்தேகங்கள் கேட்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதுபோல்தான் எல்லா நடுவர்களுக்கும். இதெல்லாம் எழுதவே எனக்கு அயர்ச்சியாக இருக்கிறது. ஆனால் இதையெல்லாம் எந்தச் சுணக்கமும் இல்லாமல் செய்தார்கள்! செய்து முடித்தார்கள்!

இந்த 17,000 போட்டியாளர்களில் இருந்து இரண்டாம் சுற்றுக்குப் போட்டியாளர்களைத் தேர்ந்தெடுத்து, நடுவர்களை நியமித்து, போட்டிகளை நடத்தி, ஏற்பாடுகளைச் செய்து, மீண்டும் இறுதிச்சுற்றுகளைச் சென்னையில் நடத்தி, இறுதியாக 182 பேச்சாளர்களை ஃபைனலைஸ் செய்து, அவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே 3 லட்சம், 2 லட்சம், 1 லட்சம் பரிசு வழங்கி இருக்கிறார்கள். முதலில் அறிவிக்கப்பட்ட பரிசு 1 லட்சம், 75 ஆயிரம், 50 ஆயிரம். ஆனால் பரிசளிப்பு விழாவில், மேடையிலே முதல்வர் இளைஞரணிக்கு இட்ட 'வேண்டுதல் வேடமிட்ட உத்தரவினால்' மேடையிலேயே பரிசுத்தொகை பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்களின் ஒப்புதலோடு துணை முதல்வரால் மாற்றப்பட்டது!

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இளைஞரணி இப்படிச் செய்யும் சாதனைகளின் நிறைவுக் கூட்டங்களில் முதல்வர் கலந்துகொள்ளும் போதெல்லாம் கவனித்தீர்கள் என்றால் முதல்வரின் பேச்சில் ஒரு எக்ஸ்ட்ரா எனர்ஜி இருக்கும். நகைச்சுவை தூக்கலாக இருக்கும். செம ஜாலியாக இருப்பார். அது இந்தக் கூட்டத்திலும் தெரிந்தது. குறிப்பாக முதல்பரிசு வென்ற மோகநிதி பத்தாண்டுகளுக்கு முன்பு ஒரு பேச்சுப்போட்டியில் கலந்து பாதியில் வெளியேறி இருக்கிறார். அப்போது அங்கே இருந்து இப்போதைய முதல்வர் தளபதி மோகநிதியின் முதுகில் தட்டிக்கொடுத்து வாழ்த்தியதை அந்த இளைஞர் மேடையிலே குறிப்பிட்டு இப்போதும் தட்டி வாழ்த்துங்கள் தலைவரே என்றார். நம் முதல்வரும் மறக்காமல், பரிசளிக்கும்போது மோகநிதியின் முதுகில் தட்டி பாராட்டினார். மிகச்சிறப்பாக பேசிய, முதல் இடம் பெற்ற தம்பி மோகநிதியை ஒரு சுற்றில் தேர்ந்தெடுத்த நடுவர்களில் நானும் ஒருவன் என்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி!

மொத்தம் 182 பேர். அதில் பலரது பெயர்களை முதல்வர் தன் பேச்சில் குறிப்பிட்டார். அந்த இளைஞர்களின் முகத்தில் அத்தனைப் பூரிப்பு. 182 பேரும் வெறும் பேச்சாளர்கள் அல்ல. 17,000த்தில் இருந்து தேடித்தேடி, கடைந்தெடுத்து, வடிகட்டி எடுக்கப்பட்ட பேச்சுப் பொக்கிஷங்கள். இவர்களை இனி கூட்டங்களில் பயன்படுத்தும்படி முதல்வரும் சரி, துணை முதல்வரும் சரி கழகத்தினரை மேடையிலே கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுதலுக்கு இணங்க இந்த இளைஞர்களை வைத்து கூட்டங்களும் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இவ்வளவு பெரிய போட்டியை எப்படித் திட்டமிட்டு, மேனேஜ் செய்து, நடத்தி முடித்தார்கள் என்று நினைக்கவே மலைப்பாக இருக்கிறது. ஆனால் அதுதான் துணை முதல்வர் உதயநிதியின் இளைஞரணி! கஷ்டமான காரியங்களை அல்ல, முடியவே முடியாத காரியங்களையும் முடித்துக் காட்டுபவர்கள் அவர்கள்! இளைஞரணிக்கும், அதை தலைமை தாங்கும் துணை முதல்வருக்கும் இந்த மாபெரும் பணியில் என்னைப் பயன்படுத்தியதற்காக மிகுந்த நன்றி உடையவனாக இருக்கிறேன்.

முதலில், துணை முதல்வர் திராவிட மாடல் பாசறைக் கூட்டங்களில் இளைஞர்களிடம் எங்களைப் பேச வைத்தார். பிறகு, என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டிகளில் இளைஞர்களை எங்களிடம் பேச வைத்தார். இந்த இரண்டு மாபெரும் சாதனைகளும் தி.மு.க.வுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த திராவிட இயக்கத்திற்கே செலுத்தி இருக்கும் புத்துணர்ச்சியும், கொடுத்திருக்கும் புத்துயிரும் எழுத்துகளில் சொல்ல முடியாது. அடுத்த நூறாண்டுகளுக்கும் நாம்தான். நம் கொள்கைகள்தான்! மதவெறியர்களுக்கும், சனாதனிகளுக்கும், அவர்களிடம் நேரடியாகவும் மறைமுகமாகவும் விலைபோனவர்களுக்கும் தமிழ்நாடு சிம்மசொப்பனம்தான்! யார் வேண்டுமானாலும் வரட்டும். நாம நம்ம வேலையைப் பார்ப்போம்!